25.2.2025. Page-no-4 இந்து தமிழ் திசை



● ‘கர்மயோகினி சங்கமம்’ நிகழ்ச்சி தொடர்பாக கோவையில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவினாசிலிங்கம் பல்கலைக்கழக துணைவேந்தர் பாரதி ஹரிசங்கர் உள்ளிட்டோர்.

படம்: ஜெ.மனோகரன்

### கன்னியாகுமரியில்

# ‘கர்மயோகினி சங்கமம்’ நிகழ்ச்சி

## மார்ச் 2-ம் தேதி நடக்கிறது

**கோவை**

தமிழ்நாடு சேவா பாரதி அமைப்பு சார்பில், கன்னியாகுமரியில் கர்மயோகினி சங்கமம் நிகழ்ச்சி நடக்கிறது.

கோவையில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவினாசிலிங்கம் பல்கலைக்கழக துணைவேந்தர் பாரதி ஹரிசங்கர் கூறியதாவது: கன்னியாகுமரியில் உள்ள அமிர்தா பல்கலைக் கழக வளாகத்தில் ‘கர்மயோகினி சங்கமம்’ என்ற நிகழ்ச்சி மார்ச் 2-ம் தேதி நடக்கிறது. வீர பெண்கள் ராணி அகல்யா பாய் ஹோல்கர், வீரமங்கை வேலுநாச்சியார், பாரதத் திருநாட்டின் சமூகத்தை கட்டி காத்த பெண்கள் அன்னை சாரதா, அவ்வையார், அம்மா அமிர்தானந்தமயி, திலகவதி அம்மையார் உள்ளிட்ட நாட்டிற்காக தியாகம் செய்த பெண்கள் பலரின் தியாகங்களை பின்பற்றி வழி நடக்கும் நோக்கில் இந்நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்க உள்ளனர். பெண் துறவிகளுக்கு மரியாதை செலுத்தும் விதமாக அவர்களுக்கு பூஜைகள் செய்யப்பட உள்ளன. பெண்களை கௌரவிக்கும் விதமாக புத்தகங்கள் வெளியிடப்பட உள்ளன.

அன்று மாலை 3.45 மணியளவில் நடைபெறும் தொடக்க விழாவில், ஆர்எஸ்எஸ் அமைப்பின் பொதுச் செயலாளர் தத்தாத்ரேயா ஹொசபலே சிறப்புரையாற்றுகிறார். மாதா அமிர்தானந்தமயி தேவி, ஏவுகணை பெண்மணி டெஸ்ஸி தாமஸ் உள்ளிட்ட பலர் பங்கேற்கின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.